செ.வெ.எண்.89 நாள்: 30.10.2019

# தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் எப்போதும்வென்றான் பொதுப்பணித்துறை கண்மாயினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் எப்போதும்வென்றானில் உள்ள பொதுப்பணித்துறை கண்மாய் தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்து வரும் கன மழையினால் நிரம்பி வழிகிறது. இந்த கண்மாயினை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் இன்று (30.10.2019) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டத்தின்கீழ் 2017-2018ம் ஆண்டில் எப்போதும்வென்றான் கண்மாய் ரூ.97.63 லட்சம் மதிப்பில் தூர்வாரப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், எப்போதும்வென்றான் கண்மாய்க்கு தண்ணீர் வரும் 2 வரத்து கால்வாய்களும், மறுகால் கால்வாய் பகுதியும் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், மறுகால் பகுதியும், 2 மடை பகுதியும் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. இந்த கண்மாயின் முழு கொள்ளளவு 125 லட்சம் கன அடியாகும். நீர் பிடிப்பு பகுதி 1588 ஏக்கர் பரப்பளவு ஆகும். இக்கண்மாயின் மூலம் 1094 ஏக்கர் நிலம் நேரடியாக பாசன வசதி பெறுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டத்தின்கீழ் கண்மாய் தூர்வாரப்பட்டதால் இந்த ஆண்டு அண்மையில் பெய்த கனமழையில் கண்மாய் நிரம்பி வழிகிறது. இதுபோன்று நமது மாவட்டத்தில் உள்ள பல்வேறு குளம், கண்மாய், குட்டைகளும் தூர்வாரப்பட்டு தற்போது நிரம்பி வருகிறது. இது விவசாயிகளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக விவசாயம் செய்திட உதவிகரமாக அமையும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். பல்வேறு பகுதிகளில் வெள்ளம் நிரம்பியுள்ளதால் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை நீர்நிலை பகுதிகளுக்கு செல்கையில் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் திரு.ரகு, பொதுப்பணித்துறை கோரம்பள்ளம் நீர்வள ஆதார அமைப்பு செயற்பொறியாளர் திருமதி.பத்மா, உதவி செயற்பொறியாளர் திரு.மாரியப்பன், உதவி பொறியாளர் திரு.ரகுபதி மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள், அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.